## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(27.04.2024 முதல் 01.05.2024)

அறிக்கைஎண்: 08/2024 தேதி : 26.04.2024

### நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 35 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது.

### நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (27.04.2024 முதல் 01.05.2024).

| கடந்த வார வானிலை (23.04.2024 முதல் 25.04.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (27.04.2024 முதல் 01.05.2024) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 23/04 | நாள்-2 24/04 | நாள்-3 25/04 | தேதி | நாள்-1 27/04 | நாள்-2 28/04 | நாள்-3 29/04 | நாள்-4 30/04 | நாள்-5 01/05 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 35 | 35 | 35 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 36 | 36 | 36 | 36 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 26 | 27 | 27 | 27 | 28 |
| 4 | 2 | 2 | மேகமூட்டம் (ஆக்டா) | 0 | 8 | 6 | 6 | 6 |
| 72-69 | 78-75 | 72-70 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-40 | 80-50 | 80-50 | 90-50 | 80-50 |
| 3 | 3 | 7 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 14 | 14 | 14 | 20 | 20 |
| கிழக்கு தென் கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தென் தென் கிழக்கு | தெற்கு | தென் தென் கிழக்கு |

### நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். 27.04.2024 முதல் 01.05.2024 ஆகிய தினங்களில் மழை இல்லை. அதிகபட்ச வெப்பநிலை 35 - 36 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40 - 50 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14 – 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும். |

| | | |
|---|---|---|
| பயறுவகை பயிர்கள் | விதைப்பு | கோடை இறவை பயிராக சித்திரைப்பட்டத்தில் ( ஏப்ரல் - மே) பயறுவகை பயிர்களை விதைக்க உகந்த இரகங்களான ஆடுதுறை 5, வம்பன் 5, வம்பன் 6 மற்றும் வம்பன் 8 போன்ற உளுந்து இரகங்களையும் வம்பன் 2 மற்றும் வம்பன் 3 போன்ற பாசிப்பயறு இரகங்களையும் பயிரிடவும். |
| தென்னை | | தென்னை மரத்தை சுற்றி உள்சாய்வு வட்டவடிவ பாத்திகளை அமைப்பது கோடையில் நீரை மண்ணில் சேமிக்க முடியும் |
| கால்நடைகளுக்கு | மாடு | கோடை காலத்தில் கால்நடைகளுக்கு ஒட்டுண்ணி தாக்கம் அதிகம் ஏற்ப்படக்கூடும். இதனால் கால்நடைகளுக்கு இரத்தசோகை மற்றும் பிற நோய்கள் ஏற்ப்பட நேரிடும். இதனால் கால்நடைகள் சோர்வுடனும் தீவனம் உட்கொள்ளா வண்ணம் காணப்படும். இவற்றில்லிருந்து கால்நடைகளை பாதுகாக்க 3.0 மி.லி பியூடாக்ஸ் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து துணியின் முலம் துடைக்கவும். |

## குறுஞ்செய்தி

வெப்பநிலை சற்று உயர்ந்து வருவதால் பயிர் கழிவு மூடாக்கு இட்டு மண் ஈரத்தினை பாதுகாக்கவும். மேலும் கோடை உழவு செய்யவும்.

**இயக்குநர்**